**Dated : 24.07.2025**

**O.S.No. 287/2023**

**PW.1 – திரு. குமார்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வடிவேலும் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். அவரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர் என்பதால் தெரியும். எத்தனை வருடமாக அவர் எனக்கு பழக்கம் என்றால் சுமார் 10 வருடமாக பழக்கம். வடிவேல் என்ன வேலை பார்க்கிறார் என்று தெரியுமா என்றால் முதலில் மொபைல் கடை வைத்திருந்தார், தற்போது என்ன வியாபாரம் செய்கிறார் என்பது பற்றி தெரியாது. அவர் எங்கு கடை வைத்திருக்கிறார் என்றால் ஊத்தங்கரையில் கடை வைத்திருக்கிறார். கடை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. வடிவேலுக்கு கடையிலிருந்து கிடைக்கும் வருமானம் தான் என்றால் ஆமாம். வடிவேலுக்கு சொந்தமாக நிலம் இருப்பதாக தெரிவித்துள்ளேன், அது எங்கு அமைந்துள்ளது என்று தெரியுமா என்றால் தாண்டியப்பனூரில் உள்ளது. அந்த சொத்தின் விஸ்தீரணம் மற்றும் சர்வே நெம்பர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. என்னுடைய வழக்கில் சொத்து சம்மந்தமாக தான் பணம் கொடுத்ததாக நான் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.

நான் சொத்தின் சர்வே நெம்பரோ, விஸ்தீரணமோ வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன். ஆவணத்தில் சொத்து விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால் நான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் எப்போது எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் 2015ல் எழுதிக்கொடுக்கப்பட்டது. தேதி, மாதம் தெரியுமா என்றால் 27.03.2015 ஆகும். பொது அதிகார ஆவணம் எழுதிவைத்த தேதியில் நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் கொடுத்தேன், கொடுத்ததால் தான் ஆவணம் எழுதிக்கொடுத்திருக்கிறார். என்னுடைய வழக்கில் மே 2015ல் கொடுத்ததாக சொல்வது தவறுதானே என்றால் மே என்பது எனக்கு சரியாக ஞாபகமில்லை, 7வது மாதம் கொடுத்தேன். மே 2015ல் என்னிடம் சுவாதீனம் கொடுத்தார் நான் பெற்றுக்கொண்டேன். நான் எப்போது பணம்கொடுத்தேன் என்றால் பத்திரம் பதிந்த போது கொடுத்தேன். பத்திரம் எப்போது பதியப்பட்டது என்றால் 23.07.2015ல் பதிந்தேன்.

27.03.2015ல் பத்திரம் பதிந்ததாக நான் சொல்லியிருப்பது தவறா என்றால் இல்லை. நான் சூலை மாதம் தான் பணம் கொடுத்தேன் என்றால் ஆமாம் சூலை மாதம் தான் பணம் கொடுத்தேன். பொது அதிகார ஆவணம்

27.03.2015ல் தான் பிரதிவாதி எழுதிக்கொடுத்தார், மே 2015ல் நான் பணம் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் பேசும் போது டோக்கன் முன்பணமாக கொடுத்தேன். டோக்கன் முன்பணமாக எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.500/–, ரூ.1,000/–மோ கொடுத்தேன், அதை தான் மே 2015ல் கொடுத்தேனா என்றால் ஆமாம். என்னுடைய வழக்கிலோ, பிரமாண பத்திரத்திலோ ரூ.9,00,000/– எப்போது பணம் கொடுத்தேன் என்பது பற்றி சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டிருக்கிறேன். அந்த பொது அதிகார ஆவணத்தை பிரதிவாதி ரத்து செய்துவிட்டார் என்றால் ஆமாம். அவ்வாறு ரத்து செய்த நாள் எனக்கு தெரியுமா என்றால் 11வது மாதம் ரத்து செய்துவிட்டார். எந்த வருடம் என்றால் 23.11.2016.

எனக்கு அந்த விவரம் எப்போது தெரியவந்தது என்றால் நான் EC போட்டு பார்த்த போது தெரிந்தது. அதனுடைய தேதி தெரியுமா என்றால் தெரியாது. அதன் பிறகு பிரதிவாதியிடம் சென்றேனா என்றால் சென்றேன். ரத்து செய்தது சம்மந்தமாக நான் கேட்டேனா என்றால் கேட்டேன், அதற்கு புரோ நோட் எழுதிக்கொடுத்து பணத்தை விரைவாக வட்டியும் முதலுமாக செலுத்திவிடுகிறேன் என்று கூறினார். நான் ரத்து செய்தவுடன் எனக்கும், பிரதிவாதிக்கும் தகராறு ஏற்பட்டதா என்றால் வாய்தகராறு ஏற்பட்டது. நான் எப்போது ரத்து செய்தது சம்மந்தமாக கேட்டேன் என்றால் EC போட்டு பார்த்த பின்னிட்டு கேட்டேன். எத்தனை மாதம் சென்று போய் கேட்டேன் என்றால் சுமார் 2, 3 மாதம் இருக்கும். என்னுடன் யார் வந்தது என்றால் நான் மட்டும் தான் போனேன். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் அவரிடம் சென்று கேட்கவே இல்லை, அவ்வாறு நான் கேட்டிருந்தால், எந்த மாதம், எந்த தேதி, எந்த வருடத்தில் சென்று கேட்டேன் என்பது எனக்கு தெரிந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல.

நான் சென்று கேட்டதற்கு பின்னிட்டு தான் அவர் எனக்கு பாண்டு எழுதி கொடுத்ததாக கூறுகிறேனா என்றால் ஆமாம். அவர் எப்போது எழுதிக்கொடுத்தார் என்று மாதம், தேதி, வருடம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. எங்கு வைத்து எழுதிக்கொடுத்தார் என்றால் என் வீட்டில் வைத்து எழுதிக்கொடுத்தார். அவ்வாறு வீட்டில் எழுதிக்கொடுக்கும் போது அங்கு யாரும் இல்லை என்றால் இல்லை. அதுபோல எவ்வளவு தொகைக்கு

எழுதிக்கொடுத்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் ரூ.9,00,000/—க்கு எழுதிக்கொடுத்தார். பாண்ட்டை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு நினைவில்லை. வீட்டிற்குள் பணம் கொடுப்பவர் வந்தார், புரோ நோட்டை எழுதிக்கொடுத்தார், மற்றவர்கள் வெளியில் இருந்தார்கள், அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. அவர்கள் வெளியே இருந்து கையெழுத்து வாங்கி கொடுத்தார்கள். இந்த பாண்ட்டை பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை, இதனை நானாகவே தயார் செய்துக்கொண்டிருக்கிறேன் என்றால் நான் எதற்காக எழுதிக்கொடுக்க வேண்டும், அவர் சொல்வது தவறு.

பொது அதிகார ஆவணம் எழுதும் போது, அவரே கூப்பிட்டாரா என்றால் பணம் வாங்கும் போது அவர் தான் கூப்பிட்டார். சார்பதிவாளார் அலுவலகத்தில் தான் நான் பணம் கொடுத்தேனா என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் பணம் கொடுத்தேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து பணம் கொடுத்ததாக என்னுடைய வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் தவறுதல் நடந்திருக்கலாம். வடிவேலுவின் கையொப்பம் அதில் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த கையெழுத்தும், பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்தும் மாறுபட்டு காணப்படுகிறது என்றால் மாறுபட்டு காணப்படவில்லை. வடிவேல் என்பவருக்கு சொத்தை விறக் வேண்டும் என்ற அவசியமே எழவில்லை, இந்த பிராமிஸரி நோட்டு அவர் பொது அதிகார ஆவணத்தினை ரத்து செய்த காரணத்தினால், முன்விரோதத்தில் இந்த பிராமிஸரி நோட்டை நான் தயாரித்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி என்னிடமிருந்த எந்தவிதமான பணமும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நான் சொத்திற்காக ரூ.9,00,000/— கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. உண்மையாகவே அவர் கிரயம் செய்வதாக இருந்திருந்தால், பொது அதிகார ஆவணம் எழுதிவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. அவர் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியிருந்ததால், எனக்கு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் தனது ஆவணத்தை ரத்து செய்துக்கொண்டது குறித்து நான் கேள்வி எழுப்ப இயலாது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்கு முறையாக வகையில் அணுகவில்லை என்றால் சரியல்ல. நான் முறையாக தான்

அணுகியிருக்கிறேன். ஆகவே நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.